1507.பின்வரும் கூற்றினை ஆராய்க.

அ) தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஒரு கருவியே

ஆ) நாம் உணரும் அனைத்து பிரச்சனைகளுக்கும் அது தீர்வாகாது

(அ) மற்றும் (ஆ) எதைக் குறிக்கிறது?

A) கூற்று (அ) மற்றும் (ஆ) சரியானவை

B) கூற்று (அ) மற்றும் (ஆ) தவறானவை

C) கூற்று (அ) சரி மற்றும் (ஆ) தவறு

D) கூற்று (அ) தவறு மற்றும் (ஆ) சரி

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1508.பின்வருவனவற்றுள், முதலில் யூனியன் பிரதேசமாக இருந்து பின்னர் மாநில அந்தஸ்தை பெற்றது எது?

A) டில்லி B) சண்டிகார்

C) கோவா D) குஜராத்

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1509.கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையை தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) சட்டம் இயற்றுதல் | 1. நீதிமன்றம் |
| b) நீதித்துறை | 2. துரோக குற்ற விசாரணை |
| c) ஜனாதிபதி | 3. நம்பிக்கையில்லா தீர்மானம் |
| d) அமைச்சர் அவை | 4. சட்டசபை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1510.மத்திய கண்காணிப்பு ஆணைய உறுப்பினர்களின் பதவிக்காலம்

A) 6 ஆண்டுகள் அல்லது 60 வயது முடிதல் இவற்றில் எது முன்னர் வருவதோ அது

B) 5 ஆண்டுகள் அல்லது 60 வயது முடிதல் இவற்றில் எது முன்னர் வருவதோ அது

C) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது முடிதல் இவற்றில் எது முன்னர் வருவதோ அது

D) 3 ஆண்டுகள் அல்லது 65 வயது முடிதல் இவற்றில் எது முன்னர் வருவதோ அது

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1511.மாவட்ட ஆட்சியர் ஒரு

A) பொது தன்மையாளர் B) தனித் தன்மையாளர்

C) நுட்பதிறனார் D) தொழில் முனைவோர்

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1512.இந்தியாவின் தலைமை தணிக்கை அதிகாரியை நியமனம் செய்பவர் யார்?

A) ஜனாதிபதி B) சபாநாயகர்

C) பிரதமர் D) துணை ஜனாதிபதி

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1513.தகவல் உரிமைச் சட்டம் 2005 எந்தெந்த அரசியலமைப்பு விதிகளை அடிப்படையாகக் கொண்டது.

A) அரசியலமைப்பு விதிகள் 19 மற்றும் 21

B) அரசியலமைப்பு விதிகள் 14 முதல் 18 வரை

C) அரசியலமைப்பு விதிகள் 23 முதல் 24 வரை

D) அரசியலமைப்பு விதிகள் 25 முதல் 28 வரை

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1514.92-வது அரசியலமைப்பு திருத்தம் மூலமாக 8-வது அட்டவணையில் எத்தனை மொழிகள் சேர்க்கப் பட்டன?

18+4 =22

A) 3 B) 4 C) 5 D) 6

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1515.எந்த அரசியல் அமைப்பு திருத்தம் வாக்கு செலுத்துவதற்கான வயதை 21-லிருந்து 18 ஆக குறைத்தது?

A) 58 வது B) 60 வது C) 61 வது D) 63 வது

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1516.பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளதை கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) உறுப்பு 20 | 1. வாழ்வுரிமை மற்றும் தனி நபர் சுதந்திரம் பாதுகாப்பு |
| b) உறுப்பு 19(5) | 2. இந்திய நிலப்பகுதி எங்கும் சுதந்திரமாக நடமாட உரிமை |
| c) உறுப்பு 21 | 3. கல்விக்கான உரிமை |
| d) உறுப்பு 21(A) | 4. குற்றங்களுக்கான குற்றத் தீர்ப்புக் குறித்துப் பாதுகாப்பு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 1 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 3 | 4 | 2 | 1 |

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1517. மாநில அமைச்சர்களின் ஊதியம் மற்றும் படிகளை முடிவு செய்வது யார்?

A) பாராளுமன்றம் (B) மாநில சட்டமன்றம்
C) ஆளுநர் D) முதலமைச்சர்

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1518. மக்களவை செயலக பணிகள் அனைத்தும் நேரடியாக கண்காணிப்பது

A) இந்திய ஜனாதிபதி
B) பிரதம மந்திரி
(C) சபா நாயகர்
D) பாராளுமன்ற விவகார அமைச்சர்

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1519. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.

A) நிதி ஆணையம்
(B) அலுவலக மொழி ஆணையம்
C) தேர்தல் ஆணையம்
D) திட்ட ஆணையம்

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1520. அகில இந்திய சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக 'சர்காரியா குழு' பரிந்துரைகளை அளித்தது. இதற்காக கீழ்க்கண்ட எந்த அமைப்புகள் நிலை நாட்டப்பட்டன?

I. அரசாலிகளிடையேயான குழு
II. வடகிழக்கு குழு
III. மண்டல குழு
IV. தேசிய வளர்ச்சிக் குழு

A) I மற்றும் II மட்டும் (B) I மற்றும் III மட்டும்
C) II மற்றும் IV மட்டும் D) I, II, III மற்றும் IV

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1521. தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் எப்போது ஒப்புதலளித்தார்?

A) 29வது ஆகஸ்டு, 2013 B) 10வது செப்டம்பர் 2013
(C) 12வது செப்டம்பர் 2013 D) 13வது செப்டம்பர் 2013

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1522. 2003 ஆம் ஆண்டின், 91ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் முக்கியமான விளைவு யாது?

A) இந்திய அரசியலிலிருந்து ஒட்டுமொத்தமாகக கட்சித்தாவலை நீக்கி விட்டது
(B) அரசியலமைப்பு அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கின்றது
C) பஞ்சாயத்து தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிடுவதை ஒட்டு மொத்தமாக நீக்கி விட்டது
D) அரசியல் கட்சிகளில் பிளவு ஏற்படுவதை ஒட்டு மொத்தமாக நீக்கி விட்டது

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1523. கீழ்க்கண்ட எந்த கூற்று(கள்) சரியானவை?

I. அனைத்து சமூக நிறுவனங்களுக்கிடையே அரசு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பிடித்துள்ளது
II. அரசு இல்லாவிட்டால் ஒழுங்கற்ற நிலையும், குழப்பமும் நிலவும்
III. அரசு, அமைதி மற்றும் ஒழுங்கைப் பராமரிக்கிறது
IV. அரசு இல்லாமல் மனிதனால் வாழ இயலாது

A) I மட்டும் சரி B) I, II மற்றும் IV ம் சரி
C) I மற்றும் IV ம் சரி (D) I, II, III மற்றும் IV ம் சரி

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1524. பின்வரும் அறிக்கையை பரிசீலனை செய்க.

இந்திய குடியரசு தலைவரை தேர்ந்தெடுக்கக் கூடிய வாக்காளர் கல்லூரி கொண்டிருக்கும் உறுப்பினர்கள்

I. பாராளுமன்ற இரு அவையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்
II. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள்
III. டில்லி மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன் படுத்தி சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

A) I மட்டும் B) II மற்றும் III
C) II மற்றும் I (D) I, II மற்றும் III

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1525. 1980 மற்றும் 1990 ஆகிய ஆண்டுகள் இரண்டும் மண்டல குழு தொடர்பாக ஏன் முக்கிய மானவையாகும்.

A) 1980 ஆம் ஆண்டு மண்டல் குழு அமைக்கப்பட்டது. 1990 ஆண்டு அக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.
(B) 1980 ஆம் ஆண்டு மண்டல் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. 1990 ஆண்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டது.
C) 1980 ஆம் ஆண்டு மண்டல் குழு அமைக்கப்பட்டது. 1990 ஆண்டு அக்குழு கலைக்கப்பட்டது.
D) 1980 ஆம் ஆண்டு அமைச்சர் குழு கொள்கை அளவில் குழு அமைக்க ஒப்புக் கொண்டது. 1990 ஆண்டுதான் குழு அமைக்கப்பட்டது.

(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)

1526. இந்திய அரசியல் சாசனத்தின் சட்டப்பிரிவு 320 மத்திய தேர்வாணையத்தின் எதனுடன் தொடர்புடையது?

A) தலைவர் B) பணியாளர் எண்ணிக்கை
C) பணிக்காலம் D) பணிகள்

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

1527. பின்வரும் மாநில ஆளுநரை குறித்து வரும் சரியான கூற்றுகள் யாவை?

1. ஆளுநர் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப் படுகிறார்.
2. அவர் மத்திய அரசால் நியமிக்கப்பட்டவராவார்.
3. ஜனாதிபதியின் பதவி காலம் வரை அவரும் பதவியில் இருப்பார்.
4. மாநில அரசின் கொள்கைகளை கண்காணிக்க மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டவர்.

மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியங்களில் எது சரியானவை?

A) 1 மற்றும் 3 சரி B) 2 மற்றும் 4 சரி
C) 1, 2 மற்றும் 3 சரி D) 1, 2, 3 மற்றும் 4 சரி

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

1528. பின்வருவனவற்றுள் எந்த குழு பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களை அரசியல் அமைப்பில் ஒரு புதிய அத்தியாயத்தை சேர்ப்பதின் மூலம் அவற்றை அங்கீகரித்து, பாதுகாத்து, பண்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்தது?

A) G.V.K. ராவ் குழு
B) L.M. சிங்வி குழு
C) அசோக் மேத்தா குழு
D) நிர்வாக சீர்திருத்த ஆணையம்

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

1529. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தகவல் உரிமைச் சட்டத்தின் குறிக்கோள் இல்லை

A) நிர்வாகத்தில் ஒளிவு மறைவு இல்லாமை
B) பொறுப்பான அதிகாரவர்க்கம்
C) பதில் சொல்லும் பொறுப்பு
D) வெளிப்படையான நிர்வாகம்

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

1530. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.

கூற்று (A) : இந்திய அரசியலமைப்பின் முகவுரை இந்திய குடியரசின் நோக்கங்களை வரையறுக்கின்றது.

காரணம் : இது இந்திய அரசியலமைப்பின் ஊக்கமாகும். ஒரு சுதந்திரமான நாட்டை உருவாக்குவதற்கும் மேலும், நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் நிலை நாட்ட உதவுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல.
C) (A) சரி, ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

1531. பின்வரும் வாக்கியத்தை கருத்தில் கொண்டு, சரியான விடையை கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடு.

கருத்து (A) : அடிப்படை உரிமைகள் முழுமை யானதல்ல. ஆனால் தகுதி உடையன.

காரணம் (R) : அடிப்படை உரிமைகள் மீது அரசு வரையறைகளை திணிக்க முடியும்.

A) 'A' மற்றும் 'R' ஆகிய இரண்டும் சரி மற்றும் 'R' என்பது 'A'-யின் சரியான விளக்கமாகும்.
B) 'A' மற்றும் 'R' ஆகிய இரண்டும் சரி. ஆனால் 'R' என்பது 'A'-யின் சரியான விளக்கமல்ல.
C) 'A' என்பது சரி ஆனால் 'R' என்பது தவறு.
D) 'A' மற்றும் தவறு. ஆனால் 'R' என்பது சரி.

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

1532. பின்வருவனவற்றுள், துணை-சபாநாயகர் குறித்த உண்மையான கூற்றுகள் யாவை?

I. சபாநாயகருக்கு அவர் கீழ்நிலை அலுவலர் இல்லை.
II. சபாநாயகருக்கு அவர் கீழ்நிலை அலுவலர்.
III. அவைக்கு அவர் நேரிடையாக பொறுப்புடையவர் இல்லை.
IV. சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகரை பதவி நீக்கம் செய்வதற்கு ஒரே மாதிரியான நடைமுறை பின்பற்றப்படுகிறது.

A) I மற்றும் II B) II மற்றும் III
C) III மற்றும் IV D) I மற்றும் IV

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

**1533.** மாநில சட்டசபை மேலவையின் அதிகப்படியான உறுப்பினர்களின் எண்ணிக்கை

A) சட்டசபை உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கு
(B) சட்டசபை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு
C) சட்டசபை உறுப்பினர்களில் இரண்டில் ஒரு பங்கு
D) சட்டசபை உறுப்பினர்களில் ஐந்தில் ஒரு பங்கு

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

**1534.** கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலை வைத்து எந்தச் சட்டம் எந்த வருடம் அறிமுகப்படுத்தப் பட்டது என்பதைப் பொருத்துக.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) சமயக் குறைபாடு சட்டம் | 1. 1876 |
| b) பஞ்சாப் குத்தகைச் சட்டம் | 2. 1891 |
| c) அரச பட்டங்கள் சட்டம் | 3. 1856 |
| d) வயது ஒப்புதல் சட்டம் | 4. 1868 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 3 | 4 | 2 |

**(TNPSC – CSS-I – GROUP-IA – 2014)**

**1535.** உள்ளாட்சித் தேர்தல்களை எந்த அமைப்பு நடத்துகிறது?

(A) மாநிலத் தேர்தல் ஆணையம்
B) மத்திய தேர்தல் ஆணையம்
C) மாவட்ட தேர்தல் வாரியம்
D) பார்வையாளர்கள்

***(TNPSC – GROUP IV – 2014)***

**1536.** எந்த இந்திய பிரதமரின் காலத்தில் தொங்கும் பாராளுமன்றம் ஏற்பட்டது?

A) ஜவஹர்லால் நேரு B) இந்திராகாந்தி
(C) ஐ.கே. குஜ்ரால் D) ராஜீவ்காந்தி

***(TNPSC – GROUP IV – 2014)***

**1537.** பத்தாவது ஐந்தாண்டு திட்டகாலம்

(A) 2002-2007 B) 2007-2012
C) 1997-2002 D) 1992-1997

***(TNPSC – GROUP IV – 2014)***

**1538.** சரியான விடையை தேர்ந்தெடு :
இந்திய அரசியலமைப்பின் ....... சட்டப்பிரிவின்படி எவரையும் விசாரணை இன்றி கைது செய்யக் கூடாது.

(A) விதி 22 B) விதி 23 C) விதி 24 D) விதி 25

***(TNPSC – GROUP IV – 2014)***

**1539.** அடிப்படை உரிமைகள் இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள பகுதி

A) பகுதி II (B) பகுதி III C) பகுதி I D) பகுதி IV

***(TNPSC – GROUP IV – 2014)***

**1540.** 42-வது சட்டதிருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு

A) 1947 (B) 1976 C) 1967 D) 1958

***(TNPSC – GROUP IV – 2014)***

**1541.** ஆளுநரை நியமிப்பவர்

A) நீதிபதி B) பிரதம மந்திரி
C) முதல் அமைச்சர் (D) குடியரசு தலைவர்

***(TNPSC – GROUP IV – 2014)***

**1542.** பண மசோதாவை மாநிலங்கள் அவை எவ்வளவு காலம் தாமதப்படுத்தலாம்?

A) இரண்டு மாதங்கள் B) ஆறு வாரங்கள்
C) 30 நாட்கள் (D) 14 நாட்கள்

***(TNPSC – GROUP IV – 2014)***

**1543.** எந்த அரசியல் விதி ஜம்மு-காஷ்மீருக்கு தனி அரசியலமைப்பை வழங்குகிறது?

(A) விதி 370 B) விதி 390 C) விதி 161 D) விதி 356

***(TNPSC – GROUP IV – 2014)***

**1544.** இந்தியாவின் பிரதம அமைச்சர்களின் பதவிக்காலம் அடிப்படையில் வரிசைப்படுத்துக.

I. திரு. ஜவஹர்லால் நேரு II. திருமதி. இந்திராகாந்தி
III. திரு. மொரார்ஜி தேசாய் IV. திரு.லால்பகதூர் சாஸ்திரி

(A) I, IV, II, III B) I, II, III, IV
C) IV, I, III, II D) II, III, IV, I

***(TNPSC – GROUP IV – 2014)***

**1545.** சிட்டிசன் எனும் சொல் எம்மொழியிலிருந்து பெறப் பட்டது.

A) கிரேக்கம் (B) இலத்தீன்
C) ஸ்பானியம் D) உருது

***(TNPSC – GROUP IV – 2014)***

**1546.** மாவட்ட அளவில் பலதரப்பட்ட பணிபுரியும் பணியாளராக இருப்பவர் யார்?

A) மாவட்ட சுகாதார அலுவலர்
B) மாவட்ட தொழிலாளர் அலுவலர்
C) தாசில்தார்
(D) மாவட்ட ஆட்சியாளர்

***(TNPSC – GROUP IV – 2014)***

**1547.** கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

*கூற்று (A)* : விதி 213ன் படி மாநில சட்டத்துறை சட்டத்தொடரில் இல்லாத போது ஆளுநர் இடைக்கால சட்டங்களை இயற்றலாம்.

*காரணம் (R)* : ஆறு மாதங்களுக்குள் அவ்வித இடைக் காலச் சட்டங்கள் சட்ட மன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும் :

A) (A) மற்றும் (R) தவறானவை
B) (A) தவறு மற்றும் (R) சரி
C) (A) சரி மற்றும் (R) தவறு
D) (A) மற்றும் (R) சரியானவை

*(TNPSC – GROUP IV – 2014)*

**1548.** சாதாரணமாக ஒரு மாநகராட்சியின் மக்கள்தொகை

A) 5 லட்சம் B) 7 லட்சம்
C) 8 லட்சம் D) 10 லட்சம்

*(TNPSC – GROUP IV – 2014)*

**1549.** தகவல் அறியும் உரிமைச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது ?

A) 2003 B) 2004 C) 2005 D) 2006

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1550.** டி.ஆர்.டி.ஓ. துறை எந்த அமைச்சகத்தை சார்ந்தது ?

A) மனித வள மேம்பாட்டுத்துறை
B) பாதுகாப்பு
C) சுற்றுச்சூழல்
D) நிதி

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1551.** எங்கு முதல் முனிசிபல் கார்பரேஷன் ஏற்படுத்தப் பட்டது ?

A) சென்னை B) பாம்பே
C) கல்கத்தா D) டெல்லி

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1552.** மாநிலங்கள் உருவானதன் அடிப்படையில் கீழ்கண்டவற்றை சரியாக பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a) | கேரளா | 1. | 1975 |
| b) | சிக்கிம் | 2. | 1966 |
| c) | ஹரியானா | 3. | 1986 |
| d) | மிசோரம் | 4. | 1956 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 1 | 3 | 2 |

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1553.** கீழ்கண்டவற்றுள் சரியாக பொருத்தப்பட்டது எது ?

I) விதி – 153 – மாநில நிர்வாக அதிகாரம்
II) விதி – 155 – ஆளுநர் நியமனத்திற்கான தகுதிகள்
III) விதி – 161 – ஆளுநரால் எடுக்கப்படும் உறுதி மொழியும் பதவிப்பிரமாணமும்
IV) விதி – 167 – ஆளுநருக்குத் தகவல் அளிப்பது தொடர்பானவற்றில் முதலமைச்சருக்குள்ள கடமைகள்

A) I B) II C) III D) IV

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1554.** ராஜ்ய சபாவைப் பற்றி பின்வரும் கூற்றுகளில் தவறானது எது ?

A) தொடர்ந்து நிகழ்கின்ற அரங்கு
B) கலைக்க முடியாதது
C) 1/3 உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒய்வு பெறுவார்கள்
D) ஓய்வு பெற்றவர்கள் மறுபடியும் தேர்ந்தெடுக்கப் படுவதற்கும் மறு நியமனத்திற்கும் தகுதி யானவர்கள்

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1555.** பின் வருவனவற்றுள் எந்தக் கூற்று தவறானது ?

I) அரசு வழிகாட்டு நெறிமுறைகள் அரசியலமைப்பு பகுதி நான்கில் கூறப்பட்டுள்ளது
II) அடிப்படைஉரிமைகள் அரசியலமைப்பு பகுதி மூன்றில் கூறப்பட்டுள்ளது
III) 'மதசார்பின்மை' என்ற சொற்பதம் 44 வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தில் 1976 சேர்க்கப்பட்டது.
IV) 'சமதர்மம்' என்ற சொல் 1976 ம் ஆண்டு 42 வது திருத்தத்தின் படி சேர்க்கப்பட்டது

A) III B) I மற்றும் II
C) I, II மற்றும் IV D) IV

*(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)*

**1556.கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது ?**

**மாநகராட்சி மேயர்**

A) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்

B) சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்

C) மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்

D) ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1557.1968–ம் ஆண்டு மக்களவையால் நிறைவேற்றப் பட்ட லோக்பால் மற்றும் லோக் அயுக்தா மசோதா காலவதியானது, ஏனெனில்**

A) மாநிலங்கள் அவை அம்மசோதாவை நிராகரித்தது

B) குடியரசு தலைவரால் அம்மசோதா நிறுத்தி வைக்கப்பட்டது

C) இரண்டு அவைகளின் கூட்டுக்குழு அம்மசோதாவை நிராகரித்தது

D) நான்காவது மக்களவை முன்கூட்டியே கலைக்கப்பட்டது

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1558.இந்தியப் பாராளுமன்றத்தின் எந்த அவை புதிய அகில இந்தியப் பணியை உருவாக்கலாம் ?**

A) லோக் சபா

B) இராஜ்ய சபா

C) பாராளுமன்ற இல்லம்

D) மேற்கூறிய எதுவுமில்லை

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1559.பின்வருவனவற்றில் பஞ்சாயத்து ராஜ்யம் தொடர்புள்ளது**

I) மாநில அரசாங்கம்    II) பல்வந்த்ராய் மேத்தா குழு

III) 73ம் திருத்தம்    IV) கிராம முன்னேற்றம்

A) I மற்றும் III    B) II மற்றும் III

C) I மற்றும் IV    D) அனைத்தும்

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1560.கீழ்காணும் வாக்கியங்களை கவனி**

கூற்று (A) : ரகசிய பணி செலவுகளை தணிக்கை செய்ய தலைமை தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு கட்டுப்பட்டு உள்ளது.

காரணம் (R) : நிர்வாகியால் தலைமை தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி கட்டுப் படுத்தப்பட்டுள்ளார்

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி ஆனால் (R) தவறு

D) (A) தவறு ஆனால் (R) சரி

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1561.கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தியுள்ளது எது ?**

| | அரசியலமைப்பு | | விதி |
|---|---|---|---|
| I. | அடிப்படை உரிமைகள் | – | 12–35 |
| II. | அடிப்படை கடமைகள் | – | 36–51 |
| III. | அரச வழிகாட்டு நெறிமுறைகள் | – | 51A |
| IV. | குடியுரிமை | – | 1 முதல் 4 வரை |

A) I மட்டும்    B) II மற்றும் III

C) III மற்றும் IV    D) IV மட்டும்

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1562.மத்திய அரசாங்கத்தின் முதன்மை சட்ட அதிகாரி**

A) தலைமை வழக்கறிஞர்

B) CAG

C) தலைமை சட்ட அதிகாரி

D) தலைமைச் செயலர்

***(TNPSC – CHILD DEVELOPMENT OFFICER – 2015)***

**1563.கீழ்கண்ட கூற்றை ஆராய்க:**

**சட்டம் மற்றும் உண்மை விசயத்தில் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்குவதை உச்ச நீதிமன்றம் பாதுகாப்பது**

1. சொந்த விருப்பம்
2. குடியரசுத் தலைவர் ஆலோசனை கேட்டால்
3. மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக மட்டுமே

எது சரியான கூற்று ?

A) 1 மட்டும்    B) 2 மட்டும்

C) 3 மட்டும்    D) 1 மற்றும் 2 மட்டும்

***(TNPSC – HEALTH OFFICER – 2015)***

**1564.** பொதுக்கணக்கு குழுவின் தலைவரை நியமனம் செய்வது:

A) பிரதம மந்திரி B) லோக்சபாவின்சபாநாயகர்
C) குடியரசுத் தலைவர் D) மத்திய நிதி அமைச்சர்

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1565.** அவசரநிலை பிரகடனப் பிரிவு கீழ்கண்ட எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டது?

A) கனடா அரசியலமைப்பு
B) ஜெர்மன் வைமார் அரசியலமைப்பு
C) அயர்லாந்து அரசியலமைப்பு
D) அமெரிக்கா அரசியலமைப்பு

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1566.** பின்வருவனவற்றில் 2014, நவம்பரில், AIBA வினது நிரந்தர உறுப்பினராக ஆனது எது?

A) SAFF B) BI
C) AFC D) AIFF

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1567.** தகவல் பெறும் உரிமை சட்டம் அமலுக்கு வந்த ஆண்டு

A) 2004 B) 2005 C) 2006 D) 2007

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1568.** தேசிய மனித உரிமை ஆணையம் ஒரு

A) அரசியலமைப்பு சட்ட அமைப்பு
B) அரசியலமைப்பிற்கு மேற்பட்ட அமைப்பு
C) சட்டமாக இயற்றப்பட்ட அமைப்பு
D) அமைச்சரவை குழுவின் தீர்மானத்தின் வடிவம்

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1569.** 'பொருளாதார நீதி' இது இந்திய அரசியலமைப்பின் ஒரு நோக்கமாக எவற்றில் கொடுக்கப்பட்டுள்ளது?

A) அரசியலமைப்பின் முகவுரை மற்றும் அடிப்படை உரிமைகள்
B) அரசியலமைப்பின் முகவுரை மற்றும் அரசுக் கொள்கைக்கான வழிகாட்டி நெறிகள்
C) அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு கொள்கைக்கான வழிகாட்டி நெறிகள்
D) இவற்றில் எதுவுமில்லை

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1570.** இந்திய அரசியலமைப்பு 360 பிரிவு குறிப்பிடுவது

A) அவசரநிலை பிரகடனம்
B) நிதி அவசரநிலை பிரகடனம்
C) குடியரசுத் தலைவர் ஆட்சி
D) தேசிய அவசரநிலை பிரகடனம்

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1571.** அர்சு வழிகாட்டி நெறிமுறை கோட்பாடு எதனை ஒற்றியது?

A) ஜெர்மானிய அரசியலமைப்பு
B) ஐரிஸ் அரசியலமைப்பு
C) ஆஸ்திரேலியா அரசியலமைப்பு
D) டென்மார்க் அரசியலமைப்பு

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1572.** முகப்புரை என்பது அரசியலமைப்பின் திறவுகோள் என்று கூறியவர் யார்?

A) எர்னஸ்ட் பார்கர் B) K.M. முன்சி
C) B.R. அம்பேத்கார் D) D.D. பாசு

*(TNPSC - HEALTH OFFICER - 2015)*

**1573.** ஒன்பதாவது அட்டவணையின் முக்கியத்துவத்தை நியாயப்படுத்துகின்ற இந்திய அரசியலமைப்பு விதி எது?

A) விதி 31–B B) விதி 31–C
C) விதி 31–D D) விதி 33

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

**1574.** இந்திய தலைமைக் கணக்காயர் மற்றும் தணிக்கையாளரின் கடமைகள் மற்றும் அதிகாரங்களை விளக்குகின்ற விதி எது?

A) விதி – 147 B) விதி – 147
C) விதி – 151 D) விதி – 153

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

**1575.** 1991–ல் முதன் முதலில் மக்கள் சாசனத்தை அறிமுகப்படுத்திய நாடு

A) பெல்ஜியம் B) இந்தியா
C) இங்கிலாந்து D) நார்வே

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1576.டெல்லி யூனியன் பிரதேசம் 1991–ல் இந்த அரசியலமைப்பு திருத்தத்திற்கு பின்பு தேசிய தலைநகர் பிரதேசம் என்று அறியப்பட்டது

A) 89வது B) 81வது C) 74வது D) 69 வது

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1577.மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது

A) மக்களே நேரடியாக
B) மாநில சட்டமன்ற உறுப்பினர்களால்
C) உள்ளாட்சி அமைப்புக்களால்
D) மாநில மேலவை உறுப்பினர்களால் மட்டும்

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1578.1986–ம் ஆண்டு இயற்றப்பட்ட 55–வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் படி உருவான மாநிலம்

A) கோவா B) சிக்கிம்
C) அருணாச்சல பிரதேசம் D) பாண்டிச்சேரி

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1579.சேவை வரிகளை விதிப்பது

A) இந்திய அரசாங்கம்
B) மாநில அரசாங்கங்கள்
C) நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்
D) கிராம பஞ்சாயத்து

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1580.1953–ம் ஆண்டு அக்டோபர் 1–ம் நாள் மொழி அடிப்படையில் ஆந்திர மாநிலம் அமைத்த போது, தலைநகராக விளங்கியது

A) விஜயவாடா B) கர்நூல்
C) ஹைதராபாத் D) குண்டூர்

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1581.அரசியலமைப்பின் விதி–340 விளக்குவது என்ன ?

A) பின்னிலை வகுப்பினர் ஆணையம்
B) தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்
C) பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்
D) பெண்கள் ஆணையம்

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1582.அஸ்ஸாம் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்குகின்ற அரசியலமைப்பு விதி எது ?

A) விதி 371 – B B) விதி 371 – C
C) விதி 371 – D D) விதி 371 – E

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1583.நிர்வாகத் தீர்ப்பாயங்களை விளக்குகின்ற விதி எது ?

A) விதி 300 – A B) விதி 312 – A
C) விதி 323 – A D) விதி 323 – B

*(TNPSC - ASST. MEDICAL OFFICER - 2015)*

1584.பின்வருவனவற்றுள் சரியானதை தேர்வு செய்க.

1. ஜனநாயக அரசாங்கம் சுதந்திரமானது
2. சுதந்திர அரசாங்கம் ஜனநாயக முறைமை உடையது
3. சுதந்திர ஜனநாயகம் ஒரு கூட்டு குழுமம் சார்புடையது
4. சுதந்திர ஜனநாயகம் பொதுநல சார்புடையது

A) 1, 2, 4 B) 1, 2, 3
C) 1, 3, 4 D) 2, 3, 4

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

1585.பின்வரும் விதிமுறைகளில் எந்த ஒன்று பாராளு மன்றத்தின் சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட இயலும் ?

A) மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்கள் தொடர்பான விதிமுறைகள்
B) மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் தொடர்பான விதிமுறைகள்
C) யூனியன் பிரதேச உயர்நீதிமன்ற அரசமைப்பு தொடர்பான விதிமுறைகள்
D) மாநிலத்தின் சட்ட மேலவை மன்றம் தொடர்பான விதிமுறைகள்

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

1586.லோக்பால் மசோதா முதன்முதலில் லோக் சபாவில் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது ?

A) 1968 B) 1967 C) 1965 D) 1964

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

**1587.** அடிப்படை கடமைகள் மீதான வர்மா கமிட்டி ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

(A) 1999 B) 1998 C) 1996 D) 1994

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1588.** பின்வருவனவற்றுள் எந்த அரசமைப்பு விதி துணை குடியரசுத் தலைவர் மாநிலங்களவை கூட்டங்களுக்கு தலைமை தாங்குவார் என கூறுகிறது?

(A) 89 B) 90 C) 87 D) 88

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1589.** இந்திய அரசியலமைப்பு விதி 360 எதைப் பற்றி கூறுகிறது?

A) போர் கால அவசரம்

B) மாநிலத்தில் சட்ட ஒழுங்கு பிரச்சினை

(C) நிதி நெருக்கடி

D) நிர்வாகச் சிக்கல்

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1590.** இந்திய பாராளுமன்ற 24வது சட்ட சீர்திருத்தத்திற்கு காரணகர்த்தாவாக அமைந்த சர்ச்சைக்குரிய வழக்கு யாது?

(A) கோலக்நாத் வழக்கு

B) சங்கரி பிரசாத் வழக்கு

C) கேசவநந்த பாரதி வழக்கு

D) ஷா பானு வழக்கு

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1591.** பட்டியல் I-ஐ பட்டியல் II-உடன் பொருத்துக :

| பட்டியல் I<br>உயர்நீதிமன்றங்கள் | பட்டியல் II<br>உருவாக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| a) அலகாபாத் | 1.1862 |
| b) டெல்லி | 2.1884 |
| c) கர்நாடகா | 3.1966 |
| d) மெட்ராஸ் | 4.1896 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1592.** இந்தியாவின் 13-வது ஜனாதிபதி யார்?

A) டாக்டர் A.P.J. அப்துல் கலாம்

B) திருமதி பிரதிபா படேல்

(C) K.R. நாராயணன்

D) B.D. ஜட்டி

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1593.** பின்வரும் பணிகளில் எந்த ஒன்று இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தின் பணிகளில் ஒன்று அல்ல?

(A) மாநில ஆளுநர் அலுவலகத்திற்கான தேர்தல் நடத்துதல்

B) குடியரசு தலைவர் மற்றும் துணை குடியரசு தலைவர் அலுவலகங்களுக்கான தேர்தல்களை நடத்துதல்

C) பாராளுமன்றத்திற்கான தேர்தல்களை நடத்துதல்

D) மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துதல்

***(TNPSC -GR.II SERVICES - 2015)***

**1594.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலக் கொள்கை தொடர்பான செயல்முறைக் கொள்கை கருத்துக்கள் இந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து கையாளப்பட்டுள்ளது.

A) ஆஸ்திரேலியா B) USA

C) கனடா (D) அயர்லாந்து

***(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)***

**1595.** 1986-ம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், மாவட்ட நுகர்வோர் மன்றங்களுக்கான அதிகார வரம்பாக வழங்கியுள்ளது

(A) 20 லட்சம் B) 25 லட்சம்

C) 15 லட்சம் D) 30 லட்சம்

***(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)***

**1596.** "பெண்களுக்கான உரிமைகள் மனித உரிமைகள் என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம்" - இந்த கூற்று கூறப்பட்டது

A) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், 1948

(B) பீஜிங் பிரகடனம், 1995

C) குடிம மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம், 1966

D) டர்பன் மாநாடு

***(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)***

1597.ஒரு மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர் மேற் கொள்ளும் பணிகள்

I) மாவட்ட மக்கள்தொகை அதிகாரி
II) முதன்மை தேர்தல் அதிகாரி
III) நீதித்துறை நியாயாதிபதி
IV) வருவாய் சேகரிப்பு அதிகாரி

மேலுள்ள கூற்றில் எவை சரியானவை? சரியான விடையை கீழ்கொடுக்கப்பட்டுள்ளவைகளிலிருந்து தேர்வு செய்க.

A) I, II, III, IV B) I, II, III
C) I, II, IV D) I, III, IV

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1598.எந்த அரசியலமைப்பு திருத்தம் மந்திரி சபையின் மொத்த அளவை மக்களவையின் பலத்தில் 15 சதவீதம் தான் அதிகபட்சம் இருக்க வகை செய்துள்ளது?

A) 90வது B) 91வது
C) 93வது D) 95வது

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1599.புதியதாக தோற்றுவிக்கப்பட்ட தெலுங்கானா மாநிலத்தில் அடங்கிய மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை

A) 18 B) 17
C) 15 D) 16

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1600.கீழ்க்கண்ட மாநிலங்களில் எது குறைவான கல்வியறிவு பெற்றுள்ளது?

A) சட்டீஸ்கர் B) ஜார்கண்ட்
C) பீகார் D) ஹரியானா

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1601.இந்திய அரசியலமைப்பில் எத்தனை அட்ட வணைப் பிரிவுகள் உள்ளன?

A) 395 B) 12
C) 10 D) 8

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1602.அலுவலர் ஆட்சி என்பது நியமிக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்ட ஓர் நிர்வாக அமைப்பு என்று கூறியவர் யார்?

A) F.D. ரூஸ்வெல்ட் B) W. வில்சன்
C) H. சைமன் D) மாக்ஸ் வீபர்

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1603.கீழ்க்கண்டவற்றுள் சரியானவை எவை?

I) அமைச்சரவை கூட்டாக மக்களவைக்கு பொறுப்புடையதாகும்.
II) அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் நிர்வாகத் தலைமைக்கு பொறுப்புடையவர்கள் ஆவார்கள்.
III) குடியரசுத் தலைவர் விரும்பும் வரை அமைச்சர்கள் பதவி வகிப்பார்கள்.
IV) அமைச்சரவை கூட்டாக பிரதம அமைச்சருக்கு பொறுப்புடையதாகும்.

A) I, II, III மற்றும் IV B) I மற்றும் II
C) I, II மற்றும் III D) I, II மற்றும் IV

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1604.கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.

A) சுதந்திரத்திற்கான உரிமை
B) சமத்துவ உரிமை
C) சொத்துரிமை
D) மத சுதந்திரத்திற்கான உரிமை

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

1605.கீழ்வருகின்ற கூற்றுகளில் சரியான மற்றும் தவறான கூற்றை காட்டுக.

I) உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அனைத்து நீதிமன்றங்களும் கட்டுபடுத்தும்.
II) உச்சநீதிமன்ற நீதிபதி உயர்நீதிமன்ற நீதிபதி களை மாற்றலாம்.
III) உச்சநீதிமன்றம் ஒரு வழக்கை ஒரு உயர்நீதி மன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்ற இயலாது.
IV) உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்திலிருந்து மேல்முறையீடுகளை விசாரிக்க இயலாது.

A) அனைத்தும் சரியே
B) I மற்றும் II சரி, ஆனால் III மற்றும் IV தவறு
C) III மற்றும் IV சரி, ஆனால் II மற்றும் I தவறு
D) அனைத்தும் தவறு

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*